**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் வியாழக்கிழமை**

O.S. 47/2020

**வா.சா.1**

**செல்வி, க/பெ.மோகன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி** :

கடந்த 30.06.2020 தேதியில் வழங்கப்பட்ட அ.வ.எண்.174/1970-ல் **Suit Register - சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 05.07.2020 தேதியில் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா புல எண்களான 570/1பி1 மற்றும் 574/1A சொத்துக்களுக்கான **TSLR கணினி நகல் வா.சா.ஆ.2** ஆகவும், கடந்த 04.04.2001 தேதியில் திருவாரூர் நகராட்சியால் தாவா சொத்திற்கு சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டு வரி விதிப்பு இல்லை என எனக்கு அளிக்கப்பட்ட **சான்று - அசல் வா.சா.ஆ.3** ஆகவும், என் ஆதார் **அட்டை நகல் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.4** ஆகவும், கடந்த 2005 முதல் 2009 வரையிலான காலக்கட்டத்திற்கு வழங்கப்பட்ட என் பழைய குடும்ப அட்டை நகல் **அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.5** ஆகவும், தாவா சொத்தில் நான் குடியிருந்து வருவதற்கான புகைப்படங்கள் **சிடியுடன் வா.சா.ஆ.6** ஆகவும், கடந்த 05.07.1990 தேதியில் தாவா சொத்திற்கு நான் தண்ட தீர்வை செலுத்தியதற்கான ரசீது - **அசல் வா.சா.ஆ.7** ஆகவும், கடந்த 28.07.2003 தேதியில் தாவா சொத்திற்கு தண்ட தீர்வை செலுத்தியதற்கான ரசீது - **அசல் வா.சா.ஆ.8** ஆகவும், தாவா சொத்திலுள்ள மின் இணைப்புக்கு பல்வேறு தேதிகளில் நான் மின் கட்டணம் செலுத்தியதற்கான

**ரசீதுகள் - அசல் (தொகுப்பு 11) வா.சா.ஆ.9** ஆகவும், கடந்த 10.06.2020, 18.06.2020 மற்றும் 22.07.2020 ஆகிய தேதிகளில் நான் ரேசன் பொருட்கள் வாங்கியதற்கு என் கைபேசிக்கு வந்த குறுந்செய்திகளின் **Screen shot Print out நகல் தொகுப்பு -2 ) வா.சா.ஆ.10** ஆகவும், குறியீடு செய்யவும், கடந்த 22.08.2017 தேதிய என் தகப்பனார் கோபால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை ஏற்றும் தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

( பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு இந்திய சாட்சிய சட்டம் 65(பி)ன் கீழ் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை என ஆட்சேபணை செய்யப்பட்டது. அதுபோல் வா.சா.ஆ.10 ஆவணம் Screen shot Print out நகல் என்பதால் முதன்மை சாட்சியமாக ஏற்க இயலாது என ஆட்சேபணை செய்யப்பட்டது. வாதிகள் தரப்பில் மேற்படி 65(பி) சான்றிதழ் விசாரணை காலத்திற்குள் தாக்கல் செய்வதாக உறுதி அளிக்கப்பட்டது. வா.சா.ஆ.10 ஆவணம் Screen shot Print out பொறுத்து உண்மைதன்மை குறித்து முழுமையான விசாரணையின்போது நிரூபணம் செய்வதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் மேற்படி பிரதிவாதிகளின் ஆட்சேபணைக்குட்பட்டு, முழுமையான விசாரணையின் பிறகு தீர்வு செய்யப்படும் என பகரப்பட்டு, மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது).

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.08.14 15:17:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.